செய்தி வெளியீடு

செ.வெ.எண்:23 நாள்:10.11.2017

**நீலகிரி மாவட்டம் உதகையில் இன்று (10.11.2017) சமூக நலத்துறை மற்றும் சத்துணவு திட்டத்துறையின் சார்பில் சர்வதேச முதியோர் தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ,ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நீலகிரி மாவட்டம் உதகையில் சமூக நலத்துறை மற்றும் சத்துணவு திட்டத்துறையின் சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ,ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற சர்வதேச முதியோர் தின விழாவில் பேசியதாவது,

ஒவ்வொருவரும் மிகவும் சுறுசுறுப்பாகவும், மனக்கவலை ஏதும் இல்லாமல் சந்தோஷமாக இருக்க வேண்டும். முதியோர்களுக்கு தேவையான மருத்துவசதி உட்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக செய்து கொடுக்க தயாராக உள்ளது. ஆகவே முதியோர்கள் அதனை பயன்படுத்தி சந்தோஷமாக இருக்குமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று கோத்தகிரி வட்டம் தேனாடு கிராமம் இட்டக்கல் பகுதியை சேர்ந்த திரு.குமார் என்பவரின் மகன் செல்வன் லோகேஷ் என்பவரின் மருத்துவ சிகிச்சைக்காக மாவட்ட ஆட்சியர் அவர்களின் விருப்புரிமை நிதியிலிருந்து ரூ.10,000/-த்திற்கான காசோலையை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி..தேவகுமாரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. முருகேசன், மருத்துவ கண்காணிப்பாளர் (சுகாதார பணிகள்) மரு.ரவிக்குமார், நிர்வாகி சரஸ் அறக்கட்டளை, முதியோர்கள், அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.